முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.

அசல் வழக்கு எண். **02/2020**

2024-ம் வருடம் ஆகஸ்ட் திங்கள் 07-ம் நாளன்று வாதி/பிரதிவாதி சாட்சியாக வா.சா.1-வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.R.ராமகிருஷ்ணன், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| பெயர். | : சிவகாமி | தொழில் | : |
| த/பெ. | : | வட்டம் | : |
| முகவரி | : | மதம் | : |
| ஜாதி | : | வயது | : |

முதல் விசாரணை:-

நான் இவ்வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன்.

15.04.1946 ம் தேதியிட்ட ரங்கசாமி கவுண்டர் மற்றும் ராமசாமி கவுண்டர் ஆகியோர் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக இணைய வழி பதிவிறக்க சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 1

17.13.1996 ரங்கசாமி கவுண்டர் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ. 2

24.08.2009 செல்லம்மாள் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ. 3.

என்னுடை குடும்ப உறவு முறை கொடிவழி ஜாபிதா வா.சா.ஆ. 4

25.12.2019 ம் தேதியிட்ட கணினி பட்டா வா.சா.ஆ.5

02.06.1992 ம்தேதியிட்ட ரங்கசாமி கவுண்டர் எழுதிவைத்த உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6

13.09.2006 4 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 7

11.12.2019 5 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக இணைய வழி பதிவிறக்க சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8

வழக்கு சொத்திற்கு வழிகாட்டி மதிப்பு இணைய வழி பதிவிறக்க நகல் வா.தா.ஆ. 9

20.08.2020 6 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக இணைய வழி பதிவிறக்க சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 10

01.01.2020 முதல் 20.01.2021 வரை வழக்கு சொத்திற்கு உள்ள வில்லங்க சான்றிதழ் இணைய வழி பதிவிறக்க நகல் வா.தா.ஆ.11

27.03.2007 7 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 12

22.08.2007 8 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 13

09.07.2009 9 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக இணைய வழி பதிவிறக்க சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 14

26.12.2011 9 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக இணைய வழி பதிவிறக்க சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 15

30.03.2012 10 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக ைஇணைய வழி பதிவிறக்க சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 16

20.08.2010 11 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக இணைய வழி பதிவிறக்க சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 17

08.11.2012 12 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக இணைய வழி பதிவிறக்க சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 18

18.01.2013 13 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக ைஇணைய வழி பதிவிறக்க சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 19

18.01.2013 14 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக இணைய வழி பதிவிறக்க சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 20

30.10.2013 15 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக இணைய வழி பதிவிறக்க சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 21

01.09.2014 16 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக இணைய வழி பதிவிறக்க சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 22

10.04.2015 17 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக இணைய வழி பதிவிறக்க சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 23

12.07.2017 18 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக இணைய வழி பதிவிறக்க சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 24

24.06.2010 19 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக இணைய வழி பதிவிறக்க சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 25

15.07.2020 5 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக இணைய வழி பதிவிறக்க சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 26

பிராது படி தீர்ப்பாக வேண்டும்.

குறுக்குவிசாரணை

5 ம் பிரதிவாதி தரப்பில்

5 ம் பிரதிவாதி கிரயம்வாங்கிய சொத்தில் எனக்கு பங்கு இல்லை என்று அவர் பெயரில் நான் கிரயம் எழுதிக் கொடுத்துள்ளேன். 5 ம்பிரதிவாதி கிரயம் வாங்கிய சொத்தில் எனக்கு பங்கு தேவையில்லை என்றால் அவர் எனக்கு கிரயம் வாங்கிய சொத்தை தவிர மற்ற சொத்தில் எனக்கு பங்கு உள்ளது. அதில் பங்கு வேண்டும். 5 ம் பிரதை வர்தி பெயரில் உள்ள பரமத்தி கிராமம் சடர்வே எண். 209/1 ஏ 1 பி ல் உள்ள 2 ஏக்கர் 45 செண்ட் நிலத்தை பொறுத்து எனக்கு ஆட்சேபணை இல்லை. அதே சர்வே எண்ணில் உள்ள மற்றொரு 63 ½ சென்டை பொறுத்து 5 ம் பிரதி வாதி பெயரில் உள்ள வா.சா.ஆ. 26 கண்டுள்ள சொத்தில் எனக்கு பாகம் உள்ளது. வர்.சா.ஆ. 26 ல் கிரயம் வாங்கி உள்ள 5 ம் பிரதிவாதியை மிரட்டி பணம் வாங்குவதற்காக எனக்கு பாகம்உள்ளது எனபொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நானும், 1 முதல் 3 பிரிதிவாதிகள் சேர்ந்து கூட்டாக இந்தவழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

1 முதல் 3 பிரதிவாதிகள் 5ம் பிரதிவாதிகக்கு எழுதிக் கொடுத்த கிரமயம் பற்றிய விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. 1 முதல்3 பிரதிவாதிகள் இந்து கூட்டுக் குடும்ப பிரதிவாதிகள் என்று சொன்னால் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகள் எங்கள்குடும்பத்திற்கு ரத்த சம்மந்தபட்ட உறவினர்கள் இல்லை என்று சொன்னால் சரிதான். 45 வருடத்திற்கு என் அப்பா எனக்கு தகுந்த சீர்வரிசை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆன பிறகு என் கணவர் வீட்டில்தான் நிரந்தரமாக வசித்து வருகிறேன் என்றால் சரிதான். என் அண்ணன் 1 ம் பிரதி வாதி வீட்டிற்கு போக வர இருப்பேன்.

வா.சா.ஆ. 1 பாகப்பிரிவினை ஆவணத்தில் ரங்கசாமி கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துகளில் இருந்து அவருக்கு மிகுதியான வருமானம் கிடைத்தது என நான் சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. ரங்கசாமி கவுண்டர் எந்த வித விருப்ப உறுதிஆவணமும் எழுதி வைக்காமல் இறந்து விட்டார் என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. என் அப்பா ரங்கசாமி கவுண்டர் உயிருடன் இருந்தபோது நல்லமனநிலையில் சுயமாக விருப்பத்துடன் 2ம் பிரதிவாதி பெயரில் 02.06.1992 அன்று ஒரு உயில் ஆவணம் எழுதி வைத்தார் என்று சொன்னால் சரியல்ல. உயில் விவரங்களை வழக்கு தாக்கல் செய்யும்போதே தெரிந்து கொண்டேன். என் அப்பா 17.03.1996 அன்று இயற்கை எய்தினார் என்றால் சரிதான். என் அம்மா பெயர் செல்லம்மாள். உயிலில் என் அம்மாவிற்கு ஆயுள் பாக்கி கொடுக்கப்பட்டு, அவர் ஆயுளிற்கு பிறகு 2ம் பிரதிவாதிக்கு முழு உரிமை கொடுக்கப்பட்டு உள்ளது என்றால் சரிதான். என்னுடைய திருமணத்திற்கு பிறகு நான் வழக்கு சொத்தை எந்த டகாலத்திலும் அனுபவித்தது கிடையாது என்றும் , வழக்கிறற்காக என் அப்பா இறந்த பிறகு நானும், என் அம்மாவும், என் அண்ணனும் கூட்டாக அனுபவம் செய்து வந்தோம் என்று நான்கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல.

10.05.2019 அன்று பாகபிரிவினை செய்து தர கேட்டேன் என நான்கூறுவது தவறு என்றால் சரியல்ல. அதன் பிறகு 5ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணத்தைபற்றி நான் தெரிந்து கொண்டேன் என கூறுவது தவறு என்றால் சரியல்ல. என் அப்பா இறந்ததற்கு பிறகு 5ம் பிரதிவாதி கிரயம்

வாங்கும் வரை பாகப்பிரிவினை கேட்டு சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் ஊர் பெரியவர்களை வைத்து கேட்டேன். ஊர் பெரியவர்களை வைத்து கேட்டேன் என இவவழக்கை மேம்படுத்துவதற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா உயில் எழுதிவைத்த விவரம் என்க்கு தெரியும என்பதாலும், சொத்தை நான் அனுபவம் செய்யாத காரணத்தினாலும் மேற்சொன்ன காலகட்டங்களில் நான் பாகப்பிரிவினை கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 5ம் பிரதிவாதி கிரயம் வாங்கி உள்ள சொத்தில் எனக்கு பாக உரிமை எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 5ம் பிரதிவாதி சரியான மறுபயன் செலுத்தி கிரயம் வாங்கி உள்ளார் என்றும், கிரய தேதி முதல் நேரடியாக கிரயம் வாங்கிய சொத்தை 5ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. 5ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய விவரங்களில் கூறப்பட்டுள்ள விவரங்களை தெரிந்து கொண்டேன்.

2ம் பிரதி வாதி கேட்டுக் கொண்டதால் 1,3 பிரதிவாதிகள் பெயர்கள் கிரய ஆவணத்தில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி கிரயம் வாங்கிய யசொத்துகளுக்கு அவர் பெயரில் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது. நான் செலுத்தி உள்ள நீதிமன்ற முத்திரை கட்டணம் தவறு என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி செலவுத் தொகையுடன் என் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி
கரூர்.